செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சிக்கு உட்பட்ட தாம்பரம் சட்டமன்ற தொகுதியில் அரசு சேவைகள் மக்களுக்கு எளிதில் சென்றடையும் வகையில் மேற்கு தாம்பரம் அம்பேத்கர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் முகாமில் குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் மாற்றுத்திறனாளி களுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட இருசக்கர வாகனம் மற்றும் பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கினார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகர கழகச் செயலாளர் எஸ்.ஆர்.ராஜா எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் ஜி.காமராஜ், தாம்பரம் மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலசுந்தர், 4வது மண்டல குழுத்தலைவர் டி.காமராஜ் மற்றும் அரசு அதிகாரிகள் உள்ளனர்.

சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகள் – கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசனை வழங்கி பேசினார். இதில் சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதிச் செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

திருச்செந்தூர் - உத்திரகோசமங்கை - இராமேஸ்வரம் மூன்று நாட்கள் ஆன்மிக சுற்றுலா!

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் ஏற்பாடு - முன்பதிவுகள் நடைபெற்று வருகிறது!

அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தகவல்!

சென்னை, பிப்.14- தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் மூலம் 3 நாட்கள் திருச்செந்தூர், இராமேஸ்வரம், சுற்றுலா சென்னை வாலாஜா சாலை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சுற்றுலா வளாகத்தில் இருந்து வெள்ளிக்கிழமை தோறும் மாலை 05.00 மணிக்கு புறப்பட்டு திருச்செந்தூர், உத்திரகோசமங்கை மற்றும் இராமேஸ்வரம், சென்று திங்கட்கிழமை காலை சென்னை வாலாஜா சாலை சுற்றுலா வளாகத்தை வந்தடையும்.

மேற்கண்ட சிறப்பு ஆன்மிக சுற்றுலாவில் முருக பெருமானின் ஆறுபடை வீடுகளில் இரண்டாம் படை வீடான திருச்செந்தூரில் அமைந்து இருக்கும் திருசெந்தில் ஆண்டவர் திருக்கோவி லில் சிறப்பு தரிசனம். உலகிலேயே முதலில் தோன்றிய முதல் கோவில் இராமநாதபுரத்தில் அமைந்து இருக்கும் உத்திரகோசமங்கை, மங்களநாதர் கோவிலில் சிறப்பு தரிசனம்.

தென்னிந்தியாவின் காசி என அழைக்கப்படும் இராமேஸ்வரத்தில் அமைந்துள்ள இராமநாத சுவாமி திருக்கோவிலில் சிறப்பு தரிசனம் இக்கோவிலில் 22 தீர்த்தங்கள் இதன் சிறப்பு அம்சம் ஆகும். மேலும் இச் சுற்றுலாவில் தனுஷ்கோடியினை சிறப்பு பார்வையிட வசதிகள் செய்யப் பட்டுள்ளது.

இந்த ஆன்மிகப் பயணத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தங்கும் விடுதிகளில் ஆன்மிக சுற்றுலா பயணிகளுக்கு தங்கும் வசதிகள் மற்றும் 3 வேளை உணவும் (Food & A/c Accommodation) வழங்கப் படும். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்களுக்கு முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com இணையதள பக்கத்திலும், அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நேரடியாகவும் முன்பதிவு செய்யலாம். இதற்கான முன்பதிவுகள் நடைபெற்று வருகிறது.

மேலும் கூடுதல் விவரங்களை தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தொலைபேசி எண்களை (180042 531111) (Toll Free). 044-25333333 044-25333444 மற்றும் What's App No: 7550063121 தொடர்பு கொண்டு பெறலாம்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.ராஜேந்திரன் தகவல் தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டத்திற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு!

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் மேற்கொண்டார்!

கடலூர், பிப். 14 - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்து புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆய்வு மேற்கொண்டார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 21.02.2025 மற்றும் 22.02.2025 ஆகிய இரு தினங்கள் கடலூர் மாவட்டத்திற்கு வருகை புரிந்து புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவிற்கான முன்னேற்பாடு பணிகளை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் முன்னிலையில் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்ததாவது:-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழகம் முழுவதும் அனைத்து மாவட்டத்திற்கும் சுற்றுப்பணம் மேற்கொண்டு கள ஆய்வு மேற்கொள்ளுதல், முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தல், பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுதல் மற்றும் அரசு துறைகளின் வாயிலாக பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி வருகிறார்.

அவ்வகையில் திருநெல்வேலி, விழுப்புரம் ஆகிய மாவட்டங்களை தொடர்ந்து கடலூர் மாவட்டத்தில் 21.02.2025 அன்று கடலூர் மஞ்சக்குப்பம் மைதானத்தில் நடைபெறவுள்ள அரசு நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முடிவுற்ற திட்டப் பணிகளை பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கவுள்ளார் தொடர்ந்து 22.02.2025 அன்று வேப்பூர் வட்டம் திருப்பெயர் பகுதியில் மாநில பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் சார்பில் நடைபெறவுள்ள பெற்றோரை கொண்டாடுவோம் நிகழ்ச்சியில் பங்கேற்கவுள்ளார் என தெரிவித்தார்.

தொடர்ந்து கடலூர் மாநகராட்சி அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற கூட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெறும் நிகழ்ச்சியில் வழங்கப்படவுள்ள நலத்திட்ட உதவிகள், பல்வேறு துறைகளின் வாயிலாக தொடங்கி வைக்கப்படவுள்ள திட்டப்பணிகள் மற்றும் விழாவில் பங்கேற்பவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் உள்ளிட்ட விழா முன்னேற்பாடு பணிகள் குறித்து துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது என அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன், மாநகராட்சி மேயர் சுந்தரிராஜா, துணை மேயர் பா.தாமரைச்செல்வன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ். ஜெயக்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் ம.இராஜசேகரன், மாநகராட்சி ஆணையாளர் மரு.எஸ்.அனு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் இரா. சரண்யா உட்பட அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ. – க.தனசேகரன் – கே.கண்ணன் முன்னிலை!

138 'அ' வட்ட பாக உறுப்பினர்கள் ஆய்வுக் கூட்டம்!

ஜம்புமுருகன் தலைமை! வே.உமாகாந்த் பங்கேற்பு!

சென்னை, பிப். 14- கலைஞர் நகர் 138 'அ' வட்டக் கழகப் பொறுப்பாளர் ஜம்பு முருகன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் - மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்ரமணியன் ஆலோசனைப்படி, கலைஞர்நகர் தெற்கு பகுதி 138அ வட்ட பாக உறுப்பினர்கள் ஆய்வுக் கூட்டம் இன்று (14.02.2025) மாலை 5 மணியளவில் சந்திரா இன், பிள்ளையார் கோவில் தெரு, ஜாபர்கான் பேட்டை என்ற முகவரியில் வட்ட பொறுப்பாளர் ஜம்பு முருகன் தலைமையில் நடைபெற உள்ளது.

விருகம்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஏ.எம்.வி.பிரபாகர் ராஜா, கணக்குநிலைகுழுத் தலைவர் க.தனசேகரன், பகுதிச் செயலாளர் கே.கண்ணன் முன்னிலையில், தொகுதி பொறுப்பாளர் வே. உமாகாந்த் ஆய்வு செய்ய உள்ளார்கள்.

இக்கூட்டத்தில் வட்டத்திற்குட்பட்ட நிர்வாகிகள், பாக தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளமாறு கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

சென்னை தென் மேற்கு மாவட்ட

கலை இலக்கிய பகுத்தறிவு பேரவையின் ஆலோசனைக் கூட்டம்!

மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் அறிக்கை!

சென்னை, பிப்.14- சென்னை தென்மேற்கு மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேர வையின் அவசர ஆலோசனைக் கூட்டம் இன்று (14.2.2025 வெள்ளிக் கிழமை) காலை 11 மணிக்கு, ஆழ்வார்பேட்டை, சி.பி.இராமசாமி சாலையில் உள்ள மயிலைத் தொகுதி எம்.எல்.ஏ. அலுவலகத்தில் அவைத் தலைவர் இரா.கோ.இளங்கோவன் தலைமையில் நடைபெறுகிறது.

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ., பகுதிச் செயலாளர்கள் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ., நந்தனம் மதி, எம்.சி.,கே.ஏழுமலை எம்.சி., மயிலை எஸ். முரளி ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அதுபோது பேரவையின் மாநில. நிர்வாகிகள் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழா, மற்றும் இறையன்பன் குத்தூஸ் அவர்களின் நூல் வெளியீட்டு விழா மற்றும் கழக ஆக்கப் பணிகள் குறித்து ஆலோசிக்கப்பட இருப்பதால், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை நிர்வாகிகள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும்படி மாவட்ட அமைப்பாளர் ச.சண்முகநாதன் கேட்டுக் கொண்டுள்ளார்.

வங்கதேசத்தில் வன்முறையால் 1,400 பேர் உயிரிழப்பு!

டாக்கா, பிப். 14 - வங்கதேசத்தில் வன்முறையால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 1,400ஐ தாண்டும் என ஐ.நா. மனித உரிமை ஆணையம் தகவல் தெரிவித்துள்ளது.

வங்கதேசத்தில் ஆட்சி மாறியிருந்தாலும் நிர்வாக அமைப்பில் மாற்றங்கள் ஏற்படவில்லை என ஐ.நா. அறிக்கையில் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது. போராட்டங்களின் போது மனித உரிமை மீறல் நடந்துள்ளது.

இது குறித்து விசாரனை நடத்த வேண்டும் என ஐ.நா. வலியுறுத்தியுள்ளது.

தியாகராயர் நகர் பகுதி முன்னாள் செயலாளர்

பழக்கடை கி.ஜெயராமன் 41 ஆம் ஆண்டு நினைவு நாள்!

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. - கே.ஏழுமலை எம்.சி. வேண்டுகோள்!

சென்னை, பிப். 14 - சென்னை தென் மேற்கு மாவட்டம், தியாகராயர் நகர் கிழக்கு பகுதிக் கழகச் செயலாளர் ஜெ. கருணாநிதி எம்.எல்.ஏ, மேற்குப் பகுதிக் கழகச் செயலாளர் கே.ஏழுமலை எம்.சி. ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

தியாகராயர் நகர் பகுதி முன்னாள் செயலாளர் பழக்கடை கி.ஜெயராமன் அவர்களின் 41 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு இன்று (14.02.2025 - வெள்ளிக்கிழமை) காலை 9 மணியளவில், தியாகராயர் நகர், கண்ணம்மாபேட்டை இடுகாட்டில் அமைந்துள்ள அவரது நினைவிடத்தில் அஞ்சலி செலுத்தும் நிகழ்வு நடைபெறுகிறது.

இந்நிகழ்வில் தியாகராயர் நகர் கிழக்கு மற்றும் மேற்கு பகுதி மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழகச் செயலாளர்கள், வட்டக் கழக நிர்வாகிகள், மாவட்டப் பிரதிநிதிகள், செயற்குழு - பொதுக்குழு உறுப்பினர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக முன்னோடிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்கும்படி கேட்டுக்கொள்கிறேம்.

இவ்வாறு தியாகராயர் நகர் பகுதிக் கழகச் செயலாளர்கள் ஜெ.கருணாநிதி, கே.ஏழுமலை ஆகியோர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தேசிய புற்றுநோய் மையத்தின் திறப்பு விழாவில் மொரீசியஸ் குடியரசின் சுகாதாரம் மற்றும் மக்கள் நலவாழ்வுத்துறை அமைச்சர் அனில் குமார் பட்சூ மற்றும் ஜூனியர் அமைச்சர் முகமது ஃபாசி அல்யுமுன் ஆகியோருடன் டாக்டர் எஸ்.எம். பாலாஜி அறுவை சிகிச்சை பற்றி விவரித்து கூறினார்.

காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் , மானம்பதி ஆகிய இரு அரசு மேல்நிலைப் பள்ளிகளில் ரூபாய் 8.47 கோடி மதிப்பீட்டில் 36 வகுப்பறைகள் கொண்ட புதிய கட்டிடங்களுக்கான பணிகளை காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் துவக்கி வைத்தார். அருகில் ஒன்றிய செயலாளர் கெ. ஞானசேகரன், பேரூர் செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளன் பேரூராட்சி தலைவர் எஸ். சசிகுமார் துணைத்தலைவர் இளமதி கோவிந்தராஜ், கவுன்சிலர்கள் சுகுணா சுந்தர்ராஜன், எஸ். ருத்திரகோட்டி ஊராட்சி மன்ற தலைவர் ராதா நடேசன், சாந்தமூர்த்தி உதய பாஸ்கர், உள்ளிட்ட ஆசிரியர்கள் திமுக நிர்வாகிகள் பள்ளிக் கல்வித் துறை அதிகாரிகள் ஆகியோர் உள்ளனர்.

நந்தம்பாக்கம் – சென்னை வர்த்தக மையத்திற்கு

முதல்வர் மு.க.ஸ்டாலின் வருகை!

பகுதிச் செயலாளர் என்.சந்திரன் அறிக்கை!

சென்னை, பிப்.14- 12வது மண்டலகுழு தலைவர் - ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் என்.சந்திரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நந்தம்பாக்கத்தில் உள்ள சென்னை வர்த்தக மையத்தில் இன்று (14.02.2025) காலை 10 மணியளவில் நடைபெறும் சூப்பர் சென்னை அறிமுக விழாவில் பங்கேற்று கண்காட்சியை திறந்து வைக்க வருகை தரும் நம்முடைய உயிரினும் மேலான அன்புத்தலைவர் - முதல்வர் தளபதி அவர்களுக்கு பட்ரோடு அண்ணா சிலை அருகில் இன்று 14-ஆம் தேதி காலை 9.00 மணியளவில் மாவட்ட தி.மு.க. சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

எனவே, ஆலந்தூர் தெற்கு பகுதிகுட்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள்,மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், பகுதி நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாமன்ற உறுப்பினர்கள்,வட்ட நிர்வாகிகள், பகுதி-வட்ட அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக தோழர்கள், தவறாமல் பெரும் திரளாய் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டு கொள்கிறேன்.

இவ்வாறு 12வது மண்டலகுழு தலைவர் - ஆலந்தூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் என்.சந்திரன் தெரிவித்துள்ளார்.

திருவொற்றியூர் மத்திய பகுதிச் செயலாளரும், மணலி 2வது மண்டலக் குழுத் தலைவருமான ஏ.வி. ஆறுமுகம் எம்.சி., தந்தை மறைந்த ஏ.வரதன் அவர்களின் நினைவேந்தல் நிகழ்வில் கலந்து கொண்டு அன்னாரின் திருவுருவ படத்திற்கு வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.கலாநிதி வீராசாமி மலர் தூவி மரியாதை செலுத்தினார். உடன் வட்டக் கழகச் செயலாளர்கள் எம்.செல்வம், டி.கணேசன், மாவட்ட அயலக அணி துணைச் அமைப்பாளர் வேதா, திருவொற்றியூர் மத்திய பகுதி துணை செயலாளர் வி.ஜி. தினகரன், துர்காகோதண்டம், எஸ்.கதிரவன், தாமோதரன், தரணிதரன், ராஜசேகரன், கலை சரவணன், விஜிடி விக்னேஷ். பி.மகேந்திரன் மற்றும் ஏ.வி ஆறுமுகம் குடும்பத்தினர் உடனிருந்தனர்.